S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE செவ்வாய் ஜனவரி 13 * 2026 * மலர் -1 * இதழ்-226* VOL-1 * ISSUE-226 விலை ரூ.3 * பக்கம் -4

### கரூர் கூட்ட நெரிசல் சம்பவம்; தனி விமானத்தில் சென்றார்:

# டெல்லியில் சி.பி.ஐ. முன் நேற்று விஜய் நேரில் ஆஜர்!

## 50 கேள்விகளுடன் அதிகாரிகள் அதிரடி விசாரணை!!

சென்னை, ஜன. 13–

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக டெல்லியில் நடைபெறும் சி.பி.ஐ. விசாரணையில் நேரில் ஆஜராக த.வெ.க. தலைவர் விஜய் நேற்று தனி விமானம் மூலம் டெல்லி புறப்பட்டுச் சென்றார். அங்கு சி.பி.ஐ. முன் ஆஜரான அவரிடம் 50 கேள்விகள் கேட்டு அதிகாரிகள் அதிரடி விசாரணை நடத்தினார்கள்.

கடந்த ஆண்டு 2025 செப்டம்பர் 27–ஆம் தேதி, கரூரில் த.வெ.க. சார்பில் நடைபெற்ற பிரசார நிகழ்ச்சியில் விஜய் பங்கேற்றார். அந்த நிகழ்ச்சியின் போது ஏற்பட்ட கடும் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 110 பேர் காயம் அடைந்தனர். இச்சம்பவம் தமிழகம் மட்டுமின்றி நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பொதுமக்கள் பாதுகாப்பில் ஏற்பட்ட குறைபாடுகள், நிகழ்ச்சி ஏற்பாடு தொடர்பான தவறுகள் உள்ளிட்ட பல்வேறு கேள்விகள் இந்த சம்பவத்துக்குப் பிறகு எழுந்தன. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் நீதி கோரி போராட்டங்களில் ஈடுபட்ட நிலையில், இந்த வழக்கை உச்ச நீதிமன்றம் நேரடியாக கண்காணிக்க உத்தரவிட்டது.

அதன்படி, சி.பி.ஐ. விசாரணை தொடங்கப்பட்டது. சி.பி.ஐ. குழுவினர் முதற்கட்டமாக கரூரில் நேரடியாக விசாரணை நடத்தினர். அங்கு சம்பவம் நடந்த இடத்தை ஆய்வு செய்ததுடன், பொதுமக்கள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் த.வெ.க. நிர்வாகிகளிடம் விசாரணை மேற்கொண்டனர். அக்கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த், தேர்தல் மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜூனா, இணைச்செயலாளர் நிர்மல் குமார், கரூர் மாவட்டச் செயலாளர் மதியழகன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் சி.பி.ஐ. முன்பு ஆஜராகி விளக்கம் அளித்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாடு எப்படி செய்யப்பட்டு இருந்தது, பாதுகாப்பு ஏற்பாடுகள் யார் பொறுப்பில் இருந்தன, கூட்டம் கட்டுப்பாட்டை இழந்தது எப்படி? என்பது போன்ற பல விஷயங்கள் குறித்து அவர்களிடம் விரிவாக விசாரணை நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, டெல்லியில் உள்ள சி.பி.ஐ. தலைமையகத்தில் 3 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற விசாரணையிலும் த.வெ.க. நிர்வாகிகள் பங்கேற்று ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களை சமர்ப்பித்தனர்.

இதேபோல் சென்னை பனையூரில் உள்ள த.வெ.க. அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விஜயின் பிரசார பேருந்தை சி.பி.ஐ. அதிகாரிகள் ஏற்கனவே பார்வையிட்டு சென்றனர். பின்னர் அந்த பேருந்தை கரூருக்கு எடுத்துச் சென்று பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்து நேற்று முன்தினம் விசாரணை நடத்தினார்கள்.

பிரசார பேருந்து டிரைவர் பரணிதரனிடம் கிடுக்கிப்பிடி கேள்விகள் கேட்கப்பட்டன. விசாரணை முடிந்தவுடன் பிரசார பேருந்தை சி.பி.ஐ. அதிகாரிகள் திரும்ப ஒப்படைத்தனர். கரூர் சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் விஜயின் பெயர் இல்லை. எனினும் அவரிடமும் விசாரணை நடத்துவதற்கு அதிகாரிகள் முடிவு செய்தனர்.

இந்தநிலையில் விசாரணையின் தொடர்ச்சியாக த.வெ.க. தலைவர் விஜயையும் நேரில் அழைத்து விசாரிக்க சி.பி.ஐ. முடிவு செய்து அவருக்கு சம்மன் அனுப்பியது. நேற்று டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் காலை 11 மணிக்கு அவர் ஆஜராக சம்மன் அனுப்பப்பட்டு இருந்தது. விசாரணைக்கு சி.பி.ஐ. அலுவலகத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என்று சம்மன் வந்த நிலையில், முன்னதாக விஜய் தரப்பில் பல கட்ட விவாதங்கள் நடத்தப்பட்டன.



விஜய்க்கு பதிலாக, பொறுப்பாளரை சி.பி.ஐ. விசாரணைக்கு அனுப்பி வைக்கலாமா? என்றுகூட விவாதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், கரூர் கூட்ட நெரிசல் வழக்கில் மாநில காவல் துறையிடமிருந்து விசாரணையை சி.பி.ஐ.க்கு மாற்ற வேண்டும் என்று தொடக்கத்தில் கோரிக்கை வைத்ததே த.வெ.க. கட்சிதான். எனவே இப்போது இந்த சம்மனை தவிர்ப்பது சரியல்ல என்றும், அதனால்தான் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க விஜய் முடிவு செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து இந்த சம்மனை ஏற்று சி.பி.ஐ. முன் ஆஜர் ஆவதற்காக விஜய் நேற்று காலை 6 மணியளவில் தனது பனையூர் வீட்டில் இருந்து டெல்லி புறப்பட்டார். அவர் தனி விமானத்தில் விஜய் டெல்லிக்குச் சென்றார். அவருடன் தேர்தல் மேலாண்மைப் பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜூன், இணைச் செயலாளர் சி.டி.ஆர். நிர்மல் குமார், விஷ்ணு ரெட்டி, ஜெகதீஷ் பழனிசாமி, நயீம், சி. ராஜமோகன் ஆகிய 6 பேர் சென்றனர். ஆனால் த.வெ.க. பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் செல்லவில்லை.

இதற்கிடையே டெல்லியில் உள்ள லோதி எஸ்டேட் சாலையில் அமைந்துள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் நேற்று காலை 11 மணியளவில் விஜய் ஆஜரானார்.

அவரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினார்கள். விசாரணையின் போது விஜயிடம் கேட்க 50–க்கும் மேற்பட்ட முக்கிய கேள்விகளை சி.பி.ஐ. அதிகாரிகள் தயார் செய்துள்ளதாக தெரிகிறது. மேலும் நேற்று தொடங்கும் விசாரணை நாளை (13–ஆம் தேதி), நாளை மறுநாள் (14–ஆம் தேதி) என 3 நாட்கள் வரை நடைபெறலாம் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே விசாரணை முடிந்த பிறகு 14–ஆம் தேதி மாலையில் அவர் டெல்லியில் இருந்து சென்னை திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது. 3 நாள்கள் விசாரணைக்குப் பிறகு இறுதிக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என தெரிகிறது. டெல்லியில் நேற்று நடைபெறும் சி.பி.ஐ. விசாரணைக்கு விஜய் ஆஜரான நிலையில், அங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

விசாரணை நடைபெறும் சி.பி.ஐ. அலுவலகம், அவர் தங்கியுள்ள நட்சத்திர ஓட்டல் மற்றும் அவர் செல்லும் அனைத்து இடங்களிலும் அவரது தனிப்பாதுகாவலர்களுடன், மத்திய ரிசர்வ் படை மற்றும் டெல்லி போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.



திசையன்விளை அருகே மிட்டாதார்குளத்தில் தி.மு.க. சார்பில் நடந்த திராவிட பொங்கல் கிரிக்கெட் போட்டியை சபாநாயகர் அப்பாவு தொடங்கி வைத்தார்.

### நிலக்கோட்டை அருகே

# பைக் மீது வேன் மோதி பால் வியாபாரி சாவு!

## சக்கரத்தில் சிக்கி தலை நசுங்கி இறந்த பரிதாபம்!!

நிலக்கோட்டை, ஜன. 13–

நிலக்கோட்டை அருகே பைக் மீது வேன் மோதி விபத்தில் வேன் சக்கரத்தில் சிக்கி தலை நசுங்கி பால் வியாபாரி பரிதாபமாக உயிரிழந்தார்.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை அருகே உள்ள கே.குரும்பபட்டியை சேர்ந்தவர் சீனிவாசன் (49). இவர் பால் வியாபாரம் செய்து வந்தார். இந்நிலையில் நேற்று கே. குரும்பபட்டியில் இருந்து நிலக்கோட்டை வழியாக செங்கோட்டை பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த ஒரு மினி லாரி மோட்டார் சைக்கிளில் மோதியது.

இதில் நிலை தடுமாறிய சீனிவாசன் ரோட்டில் சாய்ந்தபோது மினி லாரியின் சக்கரம் சீனிவாசன் தலையில் ஏறி சம்பவ இடத்திலேயே இறந்து போனார். இதுகுறித்து நிலக்கோட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் சத்ய பிரபா வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



அம்பை பகுதியில் மழை பெய்து வருவதால் மணிமுத்தாறு அருவியில் அளவுக்கு அதிகமாக தண்ணீர் விழுகிறது. இதில் சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறை தடை விதித்துள்ளது.



நாமக்கல் மாவட்டம், போதமலை கிராம மக்களை நேரில் சந்தித்து அமைச்சர் மதிவேந்தன், ராஜேஸ்குமார் எம்.பி. ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். அருகில் அட்மா குழு தலைவர் துரைசாமி மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### 16 செயற்கைக்கோள்களுடன்

# பி.எஸ்.எல்.வி.சி-62 ராக்கெட் பறந்தது!

## இந்திய விஞ்ஞானிகள் புத்தாண்டு சாதனை!!

ஸ்ரீஹரிகோட்டா, ஜன. 13–

16 செயற்கைக்கோள்களுடன் பி.எஸ்.எல்.வி.சி–62 ராக்கெட் நேற்று வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. புத்தாண்டு பிறந்த பிறகு இந்திய விஞ்ஞானிகள் செலுத்தியுள்ள முதலாவது ராக்கெட் இதுவாகும்.

ஒரு காலத்தில் சிறிய எடை கொண்ட செயற்கைக்கோள்கள் மட்டுமே செலுத்தப்பட்டு வந்தது. இவற்றை செலுத்த பி.எஸ்.எல்.வி. வகை ராக்கெட்டுகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் அதிக எடை கொண்ட செயற்கைக்கோள்களை சுமந்து செல்லக்கூடிய ராக்கெட்டுகள் இந்தியாவிடம் இல்லை. அதனால் அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய விண்வெளி முகமையான ஏரியன் ஆகியவற்றின் ராக்கெட்டுகள் மூலமே இந்தியா ஏவி வந்தது. பின்னர் அதிக எடை கொண்ட செயற்கைக்கோள்களை சுமந்து செல்லக்கூடிய ஜி.எஸ்.எல்.வி. வகை ராக்கெட்டுகளையும் இந்தியா தயாரிக்கத் தொடங்கியது. கடைசியாக டிசம்பர் மாதம் இறுதியில் மிக மிக அதிக எடை கொண்ட அமெரிக்க செயற்கைக்கோளை சுமந்து கொண்டு இந்திய ராக்கெட் பறந்தது. 2026 புத்தாண்டிலும் அதிக அளவில் செயற்கைக்கோள்களை ஏவ இந்திய விண்வெளி மையம் திட்டமிட்டுள்ளது. அதன்படி முதல்முதலாக நேற்று பி.எஸ்.எல்.வி. சி–62 ராக்கெட் மூலம் 16 செயற்கைக்கோள்களை ஏவி உள்ளது. இந்திய பாதுகாப்புத் துறை பயன்பாட்டிற்காக அன்விஷா எனும் செயற்கைக்கோள் தயாரிக்கப்பட்டது. இந்த 16 செயற்கைக்கோள்களுடன் பி.எ'ஸ்.எல்.வி.சி.–62 ராக்கெட், ஸ்ரீஹரிகோ ட்டாவில் இருந்து நேற்று காலை 10.17 மணிக்கு தீப்பிழம்பை கக்கிக் கொண்டு விண்ணை நோக்கி புறப்பட்டது. இந்த ராக்கெட் திட்டம் வெற்றிகரமாக அமைந்ததாக விஞ்ஞானி கள் தெரிவித்தனர்.



கமுதி அருகே உள்ள செங்கோட்டைப்பட்டியில் வடமாடு மஞ்சு விரட்டு போட்டி நடைபெற்றது. மாடுபிடி வீரர்கள் காளைகளை அடக்க முயன்றனர்.



நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கடும் குளிர் நிலவி வருகிறது. இதனால் ஊட்டி படகு இல்லத்தில் சுற்றுலா பயணிகள் வருகை குறைந்த அளவே காணப்பட்டது.



சேலம் மாவட்டம் ஏற்காட்டில் தொடர்ந்து நிலவி வரும் கடும் பனி மூட்டத்தின் மத்தியில் புகைப்படம் எடுத்தும், செல்பி எடுத்தும் சுற்றுலா பயணிகள் மகிழ்ந்தனர்.




சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் சேலம் மாவட்டம், கோரிமேட்டில், நடைபெற்ற நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் சேலம் மேற்கு வட்டம், செட்டிச்சாவடி கிராமத்தை சேர்ந்த 361 பயனாளிகளுக்கு ரூ.16.73 கோடி மதிப்பீட்டிலான வீட்டுமனை பட்டாக்களை மாவட்ட ஆட்சித்தலைவர்பிருந்தாதேவி. முன்னிலையில் வழங்கினார். உடன், சேலம் மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) .விவேக்யாதவ் சேலம் வருவாய் கோட்டாட்சியர்கள் .உதயகுமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# பாலக்கோடு சார் பதிவாளரை மிரட்டும் தே.மு.தி.க. நிர்வாகியின் வீடியோ வைரல்!

பாலக்கோடு, ஜன.13

தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டில் சார்பதிவாளர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது, சக்திவேல் என்பவர் சார்பதிவாளராக பணிபுரிந்து வருகிறார்.

தேமுதிகவை சேர்ந்த தருமபுரி மேற்கு மாவட்ட துணை செயலாளர் ராஜதுரை, பத்திர எழுத்தராக உள்ளார்.

இவர் கடந்த வாரம் பத்திர பதிவு செய்ய பாலக்கோடு சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றுள்ளார்.



இவரது ஆவணங்களை சரி பார்த்த சார்பதிவாளர், ராஜதுரை சமர்ப்பித்த ஆவணத்தில் வாரிசு சான்றிதழல் குறித்து சந்தேகம் ஏற்பட்டதால், வருவாய்த்துறை இணையதளத்தில் சரி பார்த்ததில் ராஜதுரை சமர்பித்த வாரிசு சான்றிதழ் போலியானது என்பது தெரியவந்தது, இதனால் இவரது பத்திர பதிவை நிராகரித்தார், ஆனால் ராஜதுரை சார்பதிவாளரை ஆவணத்தை பதிவு செய்யுமாறு மிரட்டி உள்ளார். பத்திரம் பதிவு செய்ய மறுத்ததால், கோபமடைந்த ராஜதுரை பத்திரப்பதிவாளர் சக்திவேல்,

ஆவணம் பதிவு செய்ய தன்னிடம் பணம் கேட்பதாக சமூக வலைதளங்களில் பொய்யாகதன் மீது அவதூறு பரப்பி, தவறாக விமர்சனம் செய்து வருவதாகவும், தனது பெயருக்கும், பணிக்கும் குந்தகம் ஏற்படுத்தி வரும்ராஜதுரைமீதுநடவடிக்கை எடுக்க கோரி ராஜதுரை மிரட்டும் வீடியோ ஆதாரத்துடன் பாலக்கோடு காவல் நிலையத்தில் சார் பதிவாளர் சக்திவேல் புகார் அளித்தார்.

இது குறித்து பாலக்கோடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

சார்பதிவாளரை மிரட்டும் தேமுதிக நிர்வாகியின் வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

போலிபத்திர பதிவுகளை தடுக்க சட்டம் கடுமையாக்கப்பட வேண்டும் என்பதே பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது.






# கோவை காமாட்சிபுரி ஆதீனம் உலக சமாதான மண்டபத்தில் முப்பெரும் விழா!

கோவை,ஜன.13

கோவை காமாட்சிபுரி ஆதீனம் சூலூர்த் தமிழ்ச் சங்கத்தின் 16ம் ஆண்டு தொடக்க விழா, பொங்கல் விழா, சங்ககிரிக்கோட்டை தீரன் சின்னமலை நினைவிடம் நிலம் தானம், தீரன் சின்னமலை சிலை வடிப்பு கொடையாளருக்கு பாராட்டு விழா மற்றும் தீரன் சின்னமலை அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டு விழா ஆகிய முப்பெரும் விழாவாக கோவை காமாட்சிபுரி ஆதீனம் உலக சமாதான மண்டபத்தில் நடைபெற்றது, இவ்விழாவில் முன்னாள் அமைச்சர்.செ.ம.வேலுச்சாமி அவர்கள், சூலூர் சட்டமன்ற உறுப்பினர்.வி.பி. கந்தசாமி அவர்கள் இயற்கை விஞ்ஞானி.மயில்சாமி அவர்கள் சூலூர் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர்.கலைப்பித்தன் அவர்கள்மதி உத்தமி அம்மையார் அவர்கள் மற்றும்மதி வள்ளியம்மாள் ரூட்ஸ் நிறுவன உரிமையாளர் ராமசாமி அவர்கள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். விழாவில் காமாட்சிபுரி ஆதீனம் இரண்டாம் மகா சன்னிதானம் சாக்த ஸ்ரீ பஞ்சலிங்கேஸ்வர சுவாமிகள் கொடையாளர்களை பாராட்டி அருளுரை வழங்கினார்.



# கோவை மாநகராட்சி 80வது வார்டில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்!

கோவை, ஜன.13

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.80க்குட்பட்ட உக்கடம், கெம்பட்டி காலனி பகுதியில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "நலம் காக்கும் ஸ்டாலின்" பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாமில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி.ப.ராஜ்குமார் அவர்கள், துவக்கி வைத்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் மற்றும் மக்களைத்தேடிமருத்துவம்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மருந்து உபகரணப் பெட்டகத்தினை வழங்கினார். உடன் மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுருபிரபாகரன்இ.ஆ.ப., அவர்கள், பொது சுகாதாரக் குழுத்தலைவர் பெ.மாரிசெல்வன், நகர் நல அலுவலர் மரு.மோகன், உதவி ஆணையர் செல்வி.நித்யா, மண்டல சுகாதார அலுவலர் குணசேகரன், சுகாதார ஆய்வாளர்கள் தனபாலன், திருமதி.ஜெயபார்வதி மற்றும் கெம்பட்டி பகுதி பொறுப்பாளர் என்ஜெ முருகேசன், 80 வது வட்டக் கழக செயலாளர் நா.தங்கவேலன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

# இஸ்லாமிய ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா!



வாணியம்பாடி,ஜன.13

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி இசுலாமிய ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளியின் தாளாளர் ஹாபிஸ் சாஜித் அஹமத் தலைமை வகித்தார். வாணியம்பாடி முஸ்லிம் கல்விச் சங்கம் துணை பொதுச் செயலாளர் டி.கே. ரபீக் அஹ்மத், நகரமன்ற உறுப்பினர்கள் மெஹபூபுன்னிசா, ஷாஹுன்பேகம்சலீம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளியின் தலைமை ஆசிரியர் கே. ஹபீபுர் ரஹ்மான் அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக நகரமன்ற தலைவர் உமா சிவாஜி கணேசன் கலந்துகொண்டு +1 மாணவர்கள் 317 பேருக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி வாழ்த்தி பேசினார்.

நிகழ்ச்சியில் வாணியம்பாடி முஸ்லிம் கல்விச் சங்கம் உறுப்பினர்கள் எம். இக்பால், கே.அப்துல் ஜப்பார், எம். பி.தன்வீர் அஹ்மத், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.முடிவில் பள்ளி உதவி தலைமை ஆசிரியர்ராஜாஹுசைன்நன்றி கூறினார்.

## உதயேந்திரம் பேரூர் தி.மு.க. மகளிரணி சார்பில்

# திராவிட பொங்கல் திருவிழாவை முன்னிட்டு கோலப்போட்டி!

வாணியம்பாடி, ஜன.13

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த உதயேந்திரம் பேரூர் திமுக மகளிரணி சார்பில் திராவிட பொங்கல் திருவிழாவை முன்னிட்டு கோலப்போட்டி நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக உதயேந்திரம் பேரூராட்சி மன்ற தலைவர் ஆ. பூசாராணி, பேரூர் திமுக செயலாளர் ஆ.செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டு போட்டியை தொடங்கி வைத்து பார்வையிட்டனர். இப்போட்டியில் பெண்கள் வர்ணங்களை கொண்டு பல விதமான கோலங்கள் வரைந்தனர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற பெண்களுக்கு முதல் பரிசாக ரூபாய் 3 ஆயிரம், இரண்டாம் பரிசு ரூபாய் 2 ஆயிரம், மூன்றாம் பரிசு 1500, நான்காம் பரிசு ரூபாய் 1000, ஐந்தாம் பரிசு ரூபாய் 500 மற்றும் போட்டிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் 200 ரூபாய் வழங்க உள்ளனர். நிகழ்ச்சியில் பேரூர் அவைத்தலைவர் சி.குமார், மாவட்ட பிரதிநிதிகள் டி.அம்பலவாணன், எம்.எஸ்.மேகநாதன், பொருளாளர் மீர் முகமது கனி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணைத்தலைவர் கோவி.அசோகன், பேரூர் மன்ற உறுப்பினர்கள் ரஞ்சனி ராஜ்குமார், ரமேஷ் மற்றும் கிருஷ்ணவேணி, கவிதா, விமலா உள்ளிட்ட மகளிரணி நிர்வாகிகள், கட்சி தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

மேலும் பேரூர் திமுக சார்பில் திராவிட பொங்கல் திருவிழாவை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் நடைபெற்று வருகிறது. அனைத்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வரும் 14 ஆம் தேதி நடைபெறும் பரிசளிப்பு விழாவில் ரொக்க பரிசுகள் மற்றும் கோப்பைகள் வழங்கப்படும்.



தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் அமைந்துள்ள சுந்தரம் வீதியில் ரூ.770.38 லட்சங்கள் மதிப்பீட்டில் பயனாளிகளுக்கு சாவி வழங்கும் நிகழ்வு பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரசாமி தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, தலைமை பொறியாளர் ஜீவானந்தம், உதவி பொறியாளர் கவிதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருவெண்ணெய்நல்லூர் அருகே

# மாற்றுத்திறனாளி மாணவிக்கு உதவித்தொகை, மிதிவண்டியை த.வெ.க.வினர் வழங்கினர்!

உளுந்தூர்பேட்டை, ஜன.13

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம் ஆலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி மாணவி ஒருவருக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் ரூபாய் 5,000 உதவித்தொகையும், மாற்றுத்திறனாளிகளுக்கான மிதிவண்டியும் வழங்கப்பட்டது.

இந்தமனிதநேயசேவைநிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழக கள்ளக்குறிச்சி கிழக்கு மாவட்ட செயலாளர், வழக்கறிஞர் ஆர்.பரணி பாலாஜி அவர்கள் கலந்து கொண்டு, மாணவிக்கு உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளி மிதிவண்டியை வழங்கினார். மாற்றுத்திறனாளி மாணவிகளின் கல்வி முன்னேற்றத்திற்கும், தினசரி பயண வசதிக்கும் இது பெரிதும் உதவியாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கள்ளக்குறிச்சி கிழக்கு மாவட்ட இணை செயலாளர் மோகன் கலந்து கொண்டு, மாற்றுத்திறனாளிகளின் நலன் மற்றும் உரிமைகளுக்காக தமிழக வெற்றிக் கழகம் தொடர்ந்து செயல்படும் என்றும், சமூகத்தில் பின்தங்கியவர்களுக்கு உதவுவது கட்சியின் முக்கிய நோக்கமாக உள்ளதாகவும் கூறினார்.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்தைச் சேர்ந்த சுகந்தி மற்றும் வேலு ஆகியோர் சிறப்பாக மேற்கொண்டனர். மேலும் நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் ஆரோக்கிய சதீஷ், கமலநாதன், விஜய் கலையரசன், ஜெனிதாஉள்ளிட்டோர்கலந்துகொண்டனர். இதனுடன் மாவட்ட கழக மகளிர் அணி நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கட்சித் தோழர்கள் மற்றும் தொண்டர்கள் பெருமளவில் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். மாணவியின் குடும்பத்தினர், இந்த உதவிக்கு தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்து, இத்தகைய உதவிகள் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கையில் புதியநம்பிக்கையை உருவாக்குவதாக தெரிவித்தனர்.





# அதிமுக சார்பில் 2026 சட்டமன்றத் தேர்தல் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

சேலம், ஜன.13

சேலம் மாவட்டம் வடக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட, 7வது கோட்டத்தில், அதிமுக சார்பில், பாக கிளை நிர்வாகிகளுடன், சட்டமன்றத் தேர்தல் 2026 குறித்த ஆலோசனைக் கூட்டம். திருநகர் பகுதியில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக்கூட்டத்தில் சேலம் மாநகர அதிமுக பொருப்பாளர் சிங்காரத்தின் ஆலோசனை படி, மாநகர செயலாளர் ஏகேஎஸ்எம் பாலு, மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் யாதவமூர்த்தி, அஸ்தம்பட்டி அதிமுக பகுதி ஒன்றின் செயலாளர் குமார், ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில், கட்சியினர் எவ்வாறு பணியாற்ற வேண்டும் மற்றும் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகள் குறித்து. மாநகர செயலாளர் பாலு ஆலோசனைகளைவழங்கினார். இந்தக்கூட்டத்தில்அப்பகுதி அதிமுக செயலாளர் ஜெயராம் மனோஜ், வெங்கடேஷ், உள்ளிட்ட ஏராளமான அதிமுக நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியை சேர்ந்த பாமா கண்ணன், பாரதி, கிருஷ்ணவேனி, உள்ளிட்ட ஏராளமான அதிமுகவினர் கலந்து கொண்டனர்.



# சேலத்தில் சுதேசி இயக்கத்தின் சார்பில் மாரத்தான் போட்டி!

சேலம், ஜன.13

சுதேசி இயக்கத்தின் சார்பில், சேலத்தில் மாபெரும் மாரத்தான் போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் சேலம் மாவட்டத்தில் உள்ள பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 1600க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மற்றும் இல்லத்தரசிகள், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்தப் போட்டிகளை சுதந்திரப் போராட்ட வீரரும், செக்கிழுத்த செம்மலும்மான, வ உ சிதம்பரம் பிள்ளையின் பேத்தி மரகதம் மீனாட்சி, கொடியசைத்து போட்டிகளை துவக்கி வைத்தார்.

இந்த மாரத்தான் போட்டியானது, பள்ளப்பட்டி வித்யா மந்திர் பள்ளியில் தொடங்கி, சூரமங்கலம் உழவர் சந்தை வரை சென்று மீண்டும் பள்ளியை வந்தடைந்தது.

இந்தப் போட்டிகளை ஆர் எஸ் எஸ் நிர்வாகி குமாரசாமி, தொழிலதிபர் கிருஷ்ண செட்டி, செந்தில், ஹரிஹர கோபால், உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டு, இந்த மாரத்தான் போட்டிகளை சிறப்பித்தனர். பின்னர் போட்டிகளில் வென்றவர்களுக்கு, மரகதம் மீனாட்சி பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே விபத்தில் கோமா நிலையில் இருந்து மீண்டு வந்த டீ கடைக்காரரின் வறுமை. நிலையை பார்த்து காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினர் எல். சுப்பிரமணியன் நிதி உதவி வழங்கினர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

### தர்மபுரி மாவட்டம் இண்டூர் அருகே பயங்கரம் :

# கள்ளக்காதல் விவகாரத்தில் உயிருடன் சமாதியான கொழுந்தியாள்!

## 7 லோடு மண்ணை கொட்டி கொன்ற காண்டிராக்டர் கைது!!







நல்லம்பள்ளி;ஜன13

தர்மபுரி மாவட்டம், இண்டூர் அருகே, தளவாய் ஹள்ளி பஞ்சாயத்திற்கு உட்பட்டஒசஹள்ளிபுதுார் கிராமத்தை சேர்ந்த பிரபு(35) ஆகும்.இவர் பெங்களூருவில் கட்டட மேஸ்திரி வேலை செய்து வருகிறார். இவர் கடந்த, 12வருடத்திற்கு முன், ராஜேஸ்வரி(30) என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

இந்ததம்பதிக்கு, 10வயதில் ஒரு ஆண், 7 வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது. இந்த நிலையில், ஒசஹள்ளிபுதுார் கல்லகொல்லைமேடு பகுதியில் உள்ள தனியார் லே அவுட் பகுதியில் ராஜேஸ்வரி அடித்து கொலை செய்யப்பட்ட நிலையில், மண் கொட்டி மூடப்பட்டிருப்பதாக போலீசுக்குதகவல்கிடைத்தது. இதையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற இண்டூர் இன்ஸ்பெக்டர் தமிழரசி தலைமையிலான போலீசார் பொக்லைன் மூலம், மண் கொட்டி மூடப்பட்டிருந்த ராஜேஸ்வரி சடலத்தை தோண்டி எடுத்தனர்.பின்னர் ஒசஹள்ளி புதுார் கிராமத்தை சேர்ந்த பில்டிங் கான்டிராக்டர் அனுமந்தன் (40) என்பவரை பிடித்து விசாரணை செய்தனர்.அதையடுத்துபோலீஸ் தரப்பில்கூறப்பட்டதாவது:

அனுமந்தன் மனைவி முனியம்மாள்(35)இந்த தம்பதிக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். முனியம்மாளின் தங்கையான ராஜேஸ்வரி, அனுமந்தனின் தம்பி உறவு முறையான பிரபுவை திருமணம் செய்திருந்த நிலையில், இரு குடும்பத்தினரின் வீடுகள் அருகருகே உள்ளது. இதில்,பிரபு பெங்களூருவுக்கு வேலைக்கு சென்று விடுவதால், தனிமையில் இருந்த அவரது மனைவி ராஜேஸ்வரி மற்றும் அனுமந்தன் இருவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு, நாளைடைவில் கள்ளகாதலாக மாறியுள்ளது.

இந்த நிலையில், அனுமந்தன் நேற்று மதியம் தனியார் லே அவுட் பகுதியில் ராஜேஸ்வரியை தனியாக வரவழைத்து சந்தித்தார். அப்போது, இருவருக்கும் தகராறு ஏற்பட்டதில் ராஜேஸ்வரியின் தலை, கை, கால் பகுதிகளில் கல்லால் தாக்கியதில் அவர் மயக்கமடைந்ததும், அருகிலிருந்த பள்ளத்தில் தள்ளிவிட்டு, 7 லோடு டிராக்டர்மண்கொட்டிமூடியதை அனுமந்தன் ஒப்புகொண்டார். இதில், ஏற்கனவே, கட்டிட இடிபாடுகளுடன் கூடிய மண்ணை டிராக்டரில் தயார் நிலையில் வைத்திருந்தது போலீசார் விசாரணையில் தெரிய வந்து. இதையடுத்து, மனைவியின் தங்கையை கள்ளகாதல் விவகாரத்தில் கொலை செய்த அனுமந்தனை போலீசார் கைது செய்தனர். மேலும், டிராக்டருக்கு கட்டட இடிபாடுகளை ஏற்றி விட்ட பொக்லைன் டிரைவரிடம் போலீசார் விசாரணை செய்து வருகின்றனர். பட்டபகலில் நடந்த கொலை சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சேலம் மாவட்டம் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, மாநகராட்சி எட்டாவது கோட்டம் சின்ன திருப்பதி பகுதியில், நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இலவச கேஸ் அடுப்பினை சுற்றுலாத்துறை அமைச்சரும், திமுக சேலம் மத்திய மாவட்ட செயலாளருமான அமைச்சர் ராஜேந்திரன், மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன் உள்ளிட்டோர் வழங்கினர். நிகழ்ச்சியில், எட்டாவது போட்ட திமுக செயலாளர் செல்வம், மாநகர துணை செயலாளர்கோமதி, அல்லி முத்து, தனசேகர், மாமன்ற உறுப்பினர் மூர்த்தி அவைத்தலைவர் ராஜேந்திரன், செல்வம் உள்ளிட்ட ஏராளமான திமுக அதிகாரி மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், ஈச்சனாரி ரத்தினம் கல்லூரி வளாகம் கிராண்ட் ஹாலில்பள்ளி கல்வித்துறையின்சார்பில் நடைபெற்றநிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர்பவன்குமார் க.கிரியப்பனவர் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 92 பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற தலைமைஆசிரியர்கள், முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நினைவு பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.



# சிவம்பட்டியில் ரூ.9.90 லட்சம் மதீப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மையம் திறப்பு விழா!

கிருஷ்ணகிரி, ஜன.13

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த மத்தூர் அருகே சிவம்பட்டி ஊராட்சி சிவம்பட்டி ஸ்ரீ பூங்காவன த்தம்மாள் கோவில் அருகே சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து,சிவம்பட்டி பகுதியில் ரூ.9.90 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப் பட்டு உள்ளது. நிகழ்ச்சிக்கு அதிமுக வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி தலைமை தாங்கினார். இதில் எம்.எல்.ஏ தமிழ்செல்வம் கலந்து கொண்டு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மையங்களை பயன்பாட்டுக்குதிறந்து வைத்தார். நிகழ்ச்சியில், அதிமுக தெற்கு ஒன்றிய செயலாளர் நரேஷ் குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும் அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் மனோகரன், பத்திர எழுத்தாளர் ஆனந்தன், அம்மா பேரவை இணைச் செயலாளர் முத்துசாமி, மத்தூர் வடக்கு ஒன்றிய மாணவர் அணி இணைச் செயலாளர் முனைவர் சக்திவேல், ஒன்றிய இலக்கிய அணி இணைச் செயலாளரும் ஒப்பந்ததாரர் கிருஷ்ணன், ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் கழக மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பாலக்கோடு அருகே

# சீரான குடிநீர் வினியோகம் கோரி காலி குடங்களுடன் பெண்கள் மறியல்!

பாலக்கோடு, ஜன.13

பாலக் கோடு அருகே முறையாக குடிநீர் விநியோகம் செய் யக்கோரி பெண்கள் காலி குடங்களுடன் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு அருகே பஞ்சப்பள்ளி அடுத்த மாண்ட அள்ளி கிராமத்தில், 1000–க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்களுக்கு 2 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு. வருகிறது. கடந்த ஒரு மாத மாக, குடிநீர் விநியோகம் செய்யப்படவில்லை. இது குறித்து அதிகாரிகளிடம் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால், அப்பகுதி மக்கள் தண்ணீர் தேவைக்கு, அருகில் உள்ள போர்வெல் தண்ணீரை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முறையான குடிநீர் வழங்கக் கோரி, 50–க்கும் மேற்பட்ட பெண்கள் காலி குடங்களுடன், நம்மாண்டஅள்ளி கிராமம் மெயின்ரோட்டில் அமர்ந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த அரசு பஸ்சை சிறைபிடித்தனர். இதுபற்றி தகவலறிந்த வந்த பஞ்சப்பள்ளி போலீசார், மறியலில் ஈடுபட்டவர்களிடம் சமாதனம் பேசினர். இதையடுத்து மறியல் கைவிடப்பட்டது.



ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் பிறந்த கொடிகாத்த தியாகி குமரன் அவர்களின் 94ஆம் ஆண்டின் நினைவு நாளில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் எதிரில் உள்ள தியாகி குமரன் சாலையில் அமைந்துள்ள தியாகி குமரன் திருவுருவ சிலைக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாநில துணைத் தலைவரும் ஈரோடு மாவட்டத் தலைவருமான "சேவா ரத்னா" நந்தகோபால் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

# மாணவனுக்கு வெட்டு: தந்தை - மகன் கைது!

தம்மம்பட்டி, ஜன. 13

செந்தாரப்பட்டியில் பள்ளி மாணவனை, அரிவாளால் வெட்டிய 17 வயது மாணவனையும் அவரது தந்தையையும் போலீசார் கைது செய்தனர். தம்மம்பட்டி அருகே செந்தாரப்பட்டி பேரூராட்சி 6 ஆவது வார்டில் அருகருகே உள்ள வீடுகளில் வசிக்கும் இரு மாணவர்கள், தம்மம்பட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பதினோராம் வகுப்பு படிக்கின்றனர். ஒரே வகுப்பில் படிக்கும் இரு மாணவர்களுக்கு, பள்ளியில் தகராறு இருந்து வந்தது. தொடர்ந்து தகராறு இருந்த நிலையில்,நேற்று முன்தினம் மாலை, செந்தாரப்பட்டியில் வீட்டில் இருந்த மாணவனை, தனது தந்தையுடன் வீடு தேடிச் சென்று அரிவாளால் மற்றொரு மாணவன் வெட்டியுள்ளார். இதில் தலையில் வெட்டுபட்டு பலத்த ரத்த காயமடைந்த மாணவனுக்கு, சேலம் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து தாக்குதலுக்குள்ளான மாணவனின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் விசாரணை நடத்திய, தம்மம்பட்டி போலீசார், அரிவாளால் மாணவனை வெட்டிய 17 வயது மாணவன் மற்றும் அவரது தந்தை சுரேஷ் (47) இருவரையும், கொலை முயற்சி வழக்கில் கைது செய்தனர்.



# கசிநாயக்கன்பட்டியில் திராவிட பொங்கல் விழா; போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு!

திருப்பத்தூர் ஜன.13

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அடுத்த கசநாயக்கன்பட்டி அரசு பள்ளி மைதானத்தில், திராவிட பொங்கல் விழா நடைபெற்றது. இதில் கந்திலி கிழக்கு ஒன்றியசார்பாக ஓட்டப்பந்தயம் போட்டி பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஓட்ட பந்தயமும் நடைபெற்றது. தமிழ்நாடு முழுவதும் திராவிட பொங்கல் சிறப்பாக கொண்டாட வேண்டும் என, தமிழக முதல்வர்

மு.க. ஸ்டாலின் அறிவித்தபடி, கிழக்கு கந்திலி ஒன்றியம் சார்பாக ஓட்ட பந்தயம் நடைபெற்றது. பெண்கள் பிரிவில் மற்றும் ஆண்கள் பிரிவில் முதல் பரிசு ரூ.5000, இரண்டாம் பரிசு ரூ4000, மூன்றாம் பரிசுரூ.3000 மோகன்ராஜ்தலைமையில்,ஒன்றிய கழக பொறுப்பாளர் கிழக்கு ஒன்றியம் கந்திலி ஒன்றிய துணை செயலாளர் சீனிவாசன். மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் தசரதன்,புகழேந்தி ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வரவேற்புரை

யாற்றினார். நன்றி உரை முடிவில் செல்வகுமார் நன்றி கூறினார்.

இவ்விழாவில் சின்ராசு ஒன்றிய பொருளாளர்ஓம்பிரகாஷ்மாவட்டசுற்றுச்சூழல் அமைப்பு துணை அமைப்பாளர். கிழக்கு ஒன்றிய இளைஞர்மற்றும் பொறுப்பாளர்கள் மற்றும் அமைப் பாளர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



### திருப்பத்தூர் அருகே

# பொங்கல் வைத்து பொதுமக்களுக்கு சேலை வழங்கிய சட்டமன்ற உறுப்பினர்!

திருப்பத்தூர் ஜன.13

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த உடையாமுத்தூர் கீழ் குறும்பர் தெரு பகுதியில் கந்திலி கிழக்கு ஒன்றிய துனை செயலாளர் சீனிவாசன் தலைமையில் பொங்கல் திருநாளை முன்னிட்டு பொங்கல் வைத்து சேலை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

பொங்கல் விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக திருப்பத்தூர் சட்டமன்றத் உறுப்பினர் நல்லதம்பி,கந்திலி கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர்மோகன் ராஜ் ஆகியோர்கலந்து கொண்டு பொங்கல் வைத்து 1000க்கும் மேற்பட்ட பெண்களுக்கு சேலை வழங்கினார். இன்று நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது

உடன் இந்த நிகழ்ச்சியின் போது கந்திலி ஒன்றிய மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சுகுமார் மாவட்ட நெசவுணி அமைப்பாளர் தசரதன். ராஜா. விஷமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் அழகிரி. வினோத் குமார் கந்திலி கிழக்கு ஒன்றியம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### தம்மம்பட்டி, கெங்கவல்லியில்

# தேய்பிறை அஷ்டமி பூஜை!



தம்மம்பட்டி,ஜன.13

தம்மம்பட்டி காசி ஸ்ரீ விசாலாட்சி உடனுறை காசி ஸ்ரீ விஸ்வநாதர் திருக்கோவிலில் தேய்பிறை அஷ்டமியையொட்டி ஸ்ரீ காலபைரவருக்கு சிறப்பு பூஜை நடைபெற்றது.

அதற்காக சிறப்பு யாகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, பொதுமக்கள் ஏராளமாக கொண்டு வந்த பால், தயிர், சந்தனம், திருமஞ்சனம், மஞ்சள், இளநீர் உள்ளிட்ட பல்வேறு பொருட்களால் காலபைரவருக்கு அபிசேகம் செய்யப்பட்டு,சிறப்பு அலங்காரம் செய்து பூஜைகள் நடைபெற்றன. இதில் பங்கேற்ற பலர், காலபைரவர் பாடல்களை பாடினர். பக்தர்கள் பூசணிக்காய்,தேங்காய்களில் பரிகார விளக்குகளை ஏற்றிவைத்து வழிபாடு செய்தனர். இதில் தம்மம்பட்டி,செந்தாரப்பட்டி,நாகியம்பட்டி,உலிபுரம்,திருச்சி மாவட்டம்மங்கப்பட்டி, முருங்கப்பட்டி, பாதர் பேட்டை,நாமக்கல்மாவட்டம்முள்ளுக்குறிச்சி, மெட்டாலா,நாரைக்கிணறு உள்ளிட்ட ஊர்களிலிருந்து ஏராளமானோர் பங்கேற்று வழிபாடு செய்தனர். பள்ளியறை பூஜையுடன் விழாநிறைவுற்றது.பங்கேற்ற அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# பொங்கல் பரிசு தொகுப்பு வினியோகம்!

### பாலக்கோடு மத்திய ஒன்றியத்தில்

பாலக்கோடு, ஜன.13

தர்மபுரி மேற்கு மாவட்டம், பாலக்கோடு மத்திய ஒன்றியம் பி.செட்டிஅள்ளி ஊராட்சி தீத்தாரஅள்ளி கிராமத்தில் ஒன்றிய செயலாளர் முனியப்பன் மாவட்ட பிரதிநிதி.கவுன்சிலர் முத்துசாமி ஆகியோர் தலைமையில் தீத்தாரஅள்ளி ரேஷன் கடையில் பொது மக்களுக்கு பொங்கல் பரிசு ரூ.3000 மற்றும் கரும்பு. அரிசி , சர்க்கரை ஆகியவற்றை வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் வடிவேல்.சின்ராஜி.முத்துக்குமார்.சரவணன்.தேவேந்திரன். வேலு.குமரவேல்.லட்சுமி.பெரியண்ணன்,மகேந்திரன் மற்றும்பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டம், அரூர் சட்டப் பேரவைத் தொகுதிக்கு உள்பட்ட மொரப்பூரில் பாஜக சார்பில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இதில் பொங்கல் விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற நடிகை கஸ்தூரி பங்கேற்றார்.



# ரூ.30 லட்சத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்!

## வெங்கடேஸ்வரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!!

தர்மபுரி, ஜன. 13

தர்மபுரி நகராட்சிக்குட்பட்ட குமாரசாமிபேட்டை, தர்மபுரி வட்டாட்சியர் அலுவலகம் அருகில் மற்றும் இராஜகோபால்கவுண்டர் பூங்கா ஆகிய பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைக்க வேண்டுமென தர்மபுரி எம்எல்ஏ வெங்கடேஷ்வரனிடம் பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். பொதுமக்களின் கோரிக்கையேற்று, பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நோக்கில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் தலா ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து, குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. இந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களை தர்மபுரி எம்எல்ஏ வெங்கடேஷ்வரன் ரிப்பன் வெட்டி, பொதுமக்களின் குடிநீர் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்து, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில், முன்னாள் எம்பி பாரிமோகன், பாமக மாநில செயற்குழு மணி, மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவர் தகடூர்தமிழன், மாவட்ட துணை செயலாளர் செல்வராஜ், நகர செயலாளர்கள் வெங்கடேசன், ராஜ்குமார், நகர தலைவர் ஆட்டோபாண்டியன், மாநில ஊடகப்பேரவை துணை தலைவர் தகடூர்சீனி, மாவட்ட இளைஞர் சங்க துணை செயலாளர் ஜெய்கணேஷ், வார்டு கவுன்சிலர்கள் சுரேஷ், கார்த்திக், முன்னாள் வார்டு கவுன்சிலர் கண்ணன், நிர்வாகிகள் திருப்பதி, செந்தில் முருகன், மெக்கானிக்சக்திவேல், சையத்கலீம், அருள், கௌரப்பன், செந்தில்குமார்செட்டியார், அப்பாமணி, கிருஷ்ணன், கணேசன், செந்தில், பெரியண்ணன், ஜெகன், வெங்கடேசன், கந்தசாமி, சுகுமார், வேல்முருகன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மாயமான மருந்து விற்பனையாளர் ஏரியில் சடலமாக மீட்பு!

தர்மபுரி, ஜன. 13

தர்மபுரி டவுன் அன்னசாகரம் அடுத்த எறங்காட்டு கொட்டாயை சேர்ந்த மருந்து கடை விற்பனையாளர் ஆறுமுகம், 47, இவருக்கு ஜோதி, 40, என்ற மனைவி, 19 மற்றும், 15 வயதில் இரு மகள்கள், 11 வயதில் இரண்டு மகன்கள் உள்ளனர்.



கடந்த, 7 –ந் தேதி ஆறுமுகம் மாயமானார். இது குறித்த புகார்படி, தர்மபுரி டவுன் போலீசார் விசாரணை செய்து வந்தனர். இந்த நிலையில், மதிக்கோன்பாளையம் ஏரியில் ஆண் சடலம் ஒன்று மிதப்பதாக போலீசுருக்கு தகவல் கிடைத்தது. உடனடியாக, அங்கு விரைந்து சென்ற போலீசார் சடலத்தை மீட்டு, விசாரணை மேற்கொண்டனர். இதில், ஏரியில் சடலமாக மிதந்தது, மாயமான மருந்து கடை விற்பனையாளர் ஆறுமுகம் என்பது தெரியவந்தது.

ஆறுமுகம் ஏரியில் சடலமாக மிதந்ததிற்கு காரணம் கொலையா? அல்லது தற்கொலையா? அல்லது ஏரியில் தவறி விழுந்து இறந்தாரா? என தர்மபுரி டவுன் போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்.

### போகிப் பண்டிகை:

# மாசு ஏற்படாமல் கொண்டாட வேண்டும்!

## கிருஷ்ணகிரி கலெக்டர் வேண்டுகோள்!!

கிருஷ்ணகிரி, ஜன.13

போகிப் பண்டிகையன்ற டயர், ரப்பர், பிளாஸ்டிக், செயற்கைப் பொருட்கள் எரிப்பதை தவிர்த்து

மாசு இல்லாத பொங்கலை கொண்டாட வேண்டும் என கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழர் திருநாளாம் பொங்கல் நன்னாளுக்கு முதல் நாள் நாம் "போகிப் பண்டிகை" கொண்டாடுகிறோம். இந்நாளில் சில பழைய பொருட்களை எரிப்பதென்பது "பழையன கழிதல்" என்ற வழகத்திற்கான அடையாளமாகும்.

இந்நாளில் கிழிந்த பாய்கள், பழைய துணிகள், தேய்ந்த துடப்பங்கள், தேவையான விவசாய கழிவுகள் ஆகியவற்றை தீயிட்டு கொளுத்துவார்கள்.

பெரும்பாலும் நமது கிராமங்களில் கடைபிடிக்கப்படும் இப்பழக்கம் சுற்றுச் சூழலுக்கு பெரும் தீமையை ஏற்படுத்தாத ஒன்றாகும்.

ஆனால் தற்சமயம் போகியன்று மக்கள் நெருக்கம் மிகுந்த நகரங்களில் டயர், ரப்பர், பிளாஸ்டிக் மற்றும் செயற்கை பொருட்களை எரிக்கையில் நச்சுப் புகை மூட்டம் ஏற்பட்டு, மக்களுக்கு சுவாச நோய்கள், இருமல் மற்றும் நுரையீரல், கண், மூக்கு எரிச்சல் உட்பட பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுகின்றன. நச்சுக்காற்றாலும், கரிப்புகையாலும் காற்று மாசுப்பட்டு, நம் நகரமே கருப்பு நகரமாக மாறுகிறது. நச்சு புகை கலந்த பனி மூட்டத்தால் சுகாதார பாதிப்பும், சலை போக்குவரத்திற்கும் தடை ஏற்படுகிறது. இதுபோன்ற செயல்கள் மூலம் காற்றை மாசுப்படுத்துவது சட்டப்படி குற்றமாகும். மேலும், உயர்நீதிமன்றம் பழைய மரம், வறட்டி தவிர வேறு எதை¯யும் எரிப்பதற்க தடை விதித்துள்ளது. இதனை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, போகிப் பண்டிகையன்ற டயர், ரப்பர், பிளாஸ்டிக் மற்றும் செயற்கைப் பொருட்களை எரிக்க வேண்டாம். போகிப் பண்டிகை நமக்கு இனிய ஆரம்பமாக இருக்கட்டும்.

அன்று குப்பையை முறைப்படி ஒழித்து பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடனும், மாசு இல்லாமலும் கொண்டாடுவோம். அத்துடன் அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்துகொள்கிறேன். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.



# த.வெ.க.வில் இணைந்த கிருஷ்ணகிரி காங். பிரமுகர்!

கிருஷ்ணகிரி, ஜன. 13

கிருஷ்ணகிரி ராஜீவ்காந்தி கல்லூரி நிறுவனரும், காங்., கட்சி பிரமுகருமான மூர்த்தி, அக்கட்சியில் இருந்து விலகி, சென்னையில், த.வெ.க., தலைவர் விஜய் முன்னிலையில், த.வெ.க., வில் தன்னை இணைத்துக் கொண்டார். இது குறித்து கிருஷ்ணகிரியில் மூர்த்தி நிருபர்களிடம் கூறும்போது:

இளைஞர்களின் எதிர்காலம் த.வெ.க.,வாகத்தான் இருக்கும் என்று அக்கட்சியில் நான் இணைந்துள்ளேன். காரணம், உலக நாடுகளை எடுத்துக் கொ ண்டால், பல பெரிய கட்சிகள் புதிதாக ஆரம்பித்து சில ஆண்டுகளில் அதிகாரத்திற்கு வந்துள்ளனர். அந்த வரிசையில் த.வெ.க.,வும் இருக்கும் என்பதுதான். மற்ற மாநிலங்களைக் காட்டிலும், தமிழ்நாட்டில் இளைஞர் சக்தி அதிகமாக உள்ளது. இளைஞர்கள் என்றால் அது த.வெ.க.,தான். தலைமையை நம்பி வாருங்கள் என்பதுதான் இக்கட்சியின் முக்கிய அம்சம். மாவட்டத்திற்கு ஒரு மாடல் பள்ளி என்று இல்லாமல், அனைத்து பள்ளிகளையும் மாடல் பள்ளி ஆக்க வேண்டும். அதை த.வெ.க., செய்யும் என்றார். மாவட்ட செயலாளர் முரளிதரன் மற்றும் மணிகண்டன் ஆகியோர் உடன் இருந்தனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. சார்பில் சமத்துவ பொங்கல் விழா நடந்தது. இதில் எம்.எல்.ஏ.க்கள் அசோக்குமார், தமிழ்செல்வம் உள்ளிட்டோர் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.



### கே.பி.முனுசாமி எம்.எல்.ஏ. முன்னிலையில்

# தி.மு.க.வினர் 15 பேர் அ.தி.மு.க.வில் இணைந்தனர்!

கிருஷ்ணகிரி, ஜன.13–

வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி பெரிய மனவாரண பள்ளி ஊராட்சி கங்கம் அடுக்கு கிராமத்தைச் சேர்ந்த திமுக கிளை கழக செயலாளர் சுப்பிரமணி தலைமையில், திமுகவினர் வெங்கடேஷ், ராமகிருஷ்ணன், முனியப்பன், கிருஷ்ணன், மாது, ரவி, லக்ஷ்மி, வைத்தீஸ்வரி, சின்னம்மாள் ஆகியோர் இளைஞர் நலன் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட துணைச் செயலாளர் யுவராஜ் அவர்களின் ஏற்பாட்டில் 15க்கும் மேற்பட்ட திமுகவினர் அதிமுக துணை பொதுச் செயலாளரும் வேப்பனம்பள்ளி சட்டமன்ற உறுப்பினருமான கேபி முனுசாமி முன்னிலையில் தங்களை அதிமுகவில் இணைத்துக் கொண்டனர் நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் சைலேஷ் கிருஷ்ணன் உட்பட அதிமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

### மாநில அளவிலான குத்துச்சண்டை:

# வெண்கலப் பதக்கம் வென்ற சங்கராபுரம் மாணவி!

## போலீஸ் இன்ஸ்பெக்டர் பாராட்டு!!



சங்கராபுரம், ஜன.13

தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித்துறை சார்பில், தேனி மாவட்டத்தில் பாரதியார் தினம் மற்றும் குடியரசு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டியில், கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரத்தில் உள்ள சூர்யா ஸ்போர்ட்ஸ் கிளப்பில் பயிற்சி பெற்று வருபவரும், ஜெயம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் 8ஆம் வகுப்பு மாணவியுமான வைஷ்ண வி,வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்தார். இந்த வெற்றியைத் தொடர்ந்து, மாணவி வைஷ்ணவி சங்கராபுரம் காவல் ஆய்வாளர் விநாயக முருகனை நேரில் சந்தித்தார். அப்போது காவல் ஆய்வாளர் அந்த மாணவியை பாராட்டி, மென்மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்து தெரிவித்தார்.

### பரமத்தி எஸ். புதுப்பாளையம் பகுதியில்

# நாமக்கல் கட்டுநர் சங்கம் சார்பில் இலவச பொது மருத்துவ முகாம்!



பரமத்திவேலூர்,ஜன:13

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா செருக்கை ஊராட்சி எஸ்.புதுப்பாளையம் பகுதியில் நாமக்கல் மைய அகில இந்திய கட்டுநர் சங்கம் ,திருச்செங்கோடு சுவாமி விவேகானந்தா மருத்துவ கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்திய சிறப்பு மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது. முகாமிற்கு அகில இந்திய கட்டுநர்சங்க நாமக்கல் மைய தலைவர் வி .எஸ் .தென்னரசு தலைமை வகித்தார்.சிறப்பு விருந்தினராக டாக்டர். பெரியசாமி கலந்துகொண்டு மருத்துவ முகாமை துவக்கி வைத்தார். மருத்துவ முகாமில் சுவாமி விவேகானந்தா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் மருத்துவர் டாக்டர். சுபா தலைமையிலான செவிலியர்கள், உதவியாளர்கள் கொண்ட குழுவினர் முகாமில் கலந்து கொண்ட முதியவர்கள், பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணி பெண்கள் உள்ளிட்டோர்களுக்கு சிகிச்சை மற்றும் மருத்துவ ஆலோசனை வழங்கினர். முகாமில் செருக்களை ஊராட்சி பகுதிகளை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். முகாமில் டாக்டர் பெரியசாமி, நாமக்கல் மைய அனைத்து இந்திய கட்டுநர் சங்க பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# எடப்பாடி அரசு பள்ளியில் பொங்கல் கொண்டாட்டம்; முன்னாள் மாணவர்கள் பங்கேற்பு!



எடப்பாடி ஜன 13:

எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி முன்னாள் மாணவர்கள் பொங்கல் கொண்டாட்டம் பொங்கல் திருநாளை முன்னிட்டு எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி முன்னாள் மாணவர்கள் நடத்திய மகிழ்ச்சி பொங்கல் விழாவில் முன்னாள் ஆசிரியர் ஆசிரியர்களுக்கு புத்தாடையுடன் நினைவு பரிசு வழங்கி மகிழ்ந்தனர்.

ஆசிரியரிடம் மாணவர்கள் பிரம்பால் அடி வாங்குவது போன்ற காட்சியும் . சிறுவர் சிறுமிகள் சிலம்பாட்டம் உள்ளிட்ட சாகச நிகழ்வுகளின் காட்சிகளும் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது சேலம் மாவட்டம் எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1990 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை பயின்ற முன்னாள் மாணவர்கள் எடப்பாடி வெள்ளார்நாயக்கன்பாளையத்தில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை மகிழ்ச்சி பொங்கல் திருநாளாக கொண்டாடி மகிழ்ந்தனர்.

அப்போது தான் பயிலும் போது கல்வி கற்பித்த முன்னாள் ஆசிரியர் ஆசிரியைகளையும் அழைத்து வந்து மரியாதை நிமித்தமாக மாலை மற்றும் பொன்னாடை அணிவித்து புத்தாடைகள் மற்றும் நினைவு பரிசுகள் வழங்கி மகிழ்வித்தனர். தொடர்ந்து சிறு வர்–சிறுமிகளும் மாணவ–மாணவிகளும் சிலம்பாட்டம் பொய்க்கால் ஆட்டம் உள்ளிட்ட சாகசம் செய்து அசத்தினர்.

தொடர்ந்து சர்க்கரை பொங்கல் வைத்து படையலிட்டு பொங்கலோ பொங்கல் என முழக்கமிட்டு தைப்பொங்கலை மகிழ்ச்சி பொங்கலாக கொண்டாடி ஒருவருக்கொருவர் சமத்துவ பொங்கல் வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் குடும்பத்தோடு முன்னாள் மாணவர்களும், முன்னாள் ஆசிரியர் ஆசிரியைகளும் கலந்து கொண்டு தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டனர்.


# பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரராகிய திருநெல்வேலி மாவட்டம் கதவு எண் 5/48 சுனாமி காலனி தோமையார்புரம் விஜயாபதி 627104 என்ற முகவரியில் வசிக்கும் அருள்தாசன் முறையான என்பவரின் தகவலின் பேரில் தெரிவிப்பதுயாதெனில். எனது கட்சிக்காரர் ராதாபுரம் சார்பதிவகத்தில் 5822/2025 பதிவு செய்யப்பட்ட செட்டில்மென்ட் பத்திரம் சர்வே எண் 208/53க்கான சுமார் 2.74 சென்ட் சொத்தை அனுபவித்து வருகின்றார். மேற்படி சொத்தை ஈடுகெட்டி எனது கட்சிக்காரர் Veritas Finance Ltd ல் கடன் கோரும் போது சொத்து சம்மந்தமான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது. அப்போது தன் சொத்திற்கு சம்மந்தமான மூல ஆவணம் இலவச வீட்டுமனை பட்டா எண் 1919 எனது கட்சிக்காரர் Xerox எடுப்பதற்காக. 15/12/2025 அன்று பேருந்தில் சென்றபோது அவரிடம் இருந்து சொத்திற்கு சம்மந்தமான மேற்படி மூல ஆவணம் தொலைந்தது தெரியவந்தது. ஆகவே மேற்படி காணாமல் போன அசல் மூல ஆவணத்தை எடுத்து தன் வசம் வைத்திருப்பவரோ அல்லது சொத்தின் பெயரில் யானுமே உரிமையோ, ஆட்சபனையோ பின் தொடர்ச்சியோ இருந்தாலோ நாளை முதல் 15 நாட்களுக்குள் எழுத்து மூலமாக தக்க ஆதாரத்துடன் கீழ்க்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும். அதன்பின் வரும் எந்தவிதமான ஆட்சியேபனையும் எனது கட்சிக்காரரை எந்த வில்லங்கத்திற்கும் கட்டுபடுத்தாது என்பதை இந்த பொது அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

M. MARIA SINGAM . M. A. LLB ,
ADVOCATE/NOTARY PUBLIC
GO. Ms. No. 202/17, 2.No. 328/84
24,LAW CHAMBER


### குமாரபாளையத்தில்

# சவுண்டம்மன் கோவில் திருவிழா; ஏற்பாடுகள் தீவிரம்!

குமாரபாளையம், ஜன. 13



குமாரபாளையம் சவுண்டம்மன் கோயில் திருவிழாவிற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறது. குமாரபாளையம் சேலம் சாலை ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோயிலில் ஆண்டுதோறும் ;பொங்கல் சமயத்தில் திருவிழா நடப்பது வழக்கம். இந்த ஆண்டு திருவிழாவிற்காக கோயில் முன்பு முகூ ர்த்தக்கால் நடும் வைபவம் நடந்தது. அம்மனுக்கு சிறப்பு அபிஷேக, அலங்கார, ஆராதனைகள் நடத்தப்பட்டது. முகூ ர்த்தக்காலுக்கு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டு, பெரியோர்கள் பலர் சேர்ந்து பிடிக்க முகூர்த்தக்கால் நடப்பட்டது. ஜன. 14ல் மாலை 05:00 மணிக்கு காவிரி ஆற்றிலிருந்து சக்தி அழைப்பு, ஜன. 15ல் காலை 10:00 மணிக்கு காவிரி ஆற்றிலிருந்து சாமுண்டி அழைப்பு, மாலை 04:00 மணிக்கு பெரிய பொங்கல் பூஜை, ஜன. 16ல் மாலை 06:00 மணிக்கு மகா ஜோதி அழைத்தல், ஜன. 17ல் காலை 07:30 மணிக்கு அம்மன் கோயிலிலிருந்து மஞ்சள் நீராட்டு மெரவணை, மாலை 06:00 மணிக்கு சத்தாபரணம் அலங்கார மெரவணை மற்றும் வாண வேடிக்கை நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளை விழாக் குழுவினர் செய்துவருகிறார்கள். அனைத்து நிகழ்ச்சியிலும் வீரகுமாரர்கள் கத்தி போட்டவாறு அம்மனை அழைத்து வருவார்கள். இதனை காண பல்வேறு மாநிலங்களிலிருந்தும், மாவட்டங்களிலிருந்தும் பக்தர்கள் பெருமளவில் வருவது வழக்கம். இந்த விழாவிற்காக பந்தல் அமைக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.